# காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழக
# புதிய துணைவேந்தர் தேர்வுக்குழு அமைக்க நடவடிக்கை

▶ ஆத்தூர்,பிப்.1–

திண்டுக்கல் மாவட்டம் காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தின் தற்போதைய துணைவேந்தர் டாக்டர்சு.நடராஜன் அவர்களின் பதவிக்காலம் வரும் 22 மே, 2019 இல் முடிவடைவதால் புதிய துணைவேந்தரைத் தேர்வுசெய்யும் தேடல்குழு அமைக்க மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதுகுறித்துப் பல்கலைக்கழகச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, காந்திகிராம கிராமிய நிகர்நிலைப்பல்கலைக்கழகம் மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் கட்டுப்பாட்டிலும் பல்கலைக்கழக மானியக்குழுவின் நிதிநல்கையுடனும் செயல்பட்டு வருகின்றது. இப்பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக டாக்டர் சு.நடராஜன் மே 23, 2014 முதல் இருந்துவருகின்றார்.

இவரது பதவிக்காலம் வரும் மே 22, 2019 தேதியுடன் (5 ஆண்டுகள்) நிறைவு பெறுகின்றது.

இதனால் புதிய துணைவேந்தரைத் தேர்வு செய்வதற்கான தேடல்குழுவினை அமைக்க மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் பணியினைத் தொடங்கியுள்ளது.

தேடல்மற்றும்தேர்வுக்குழு நியமிக்கப்பட்டவுடன் இதர அறிவிப்புகள் தேர்வுக்குழுவினரால் அறிவிக்கப்படும், என்று காந்திகிராம கிராமிய நிகர்நிலைப்பல்கலைக்கழகச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**30.01.2019**

**Panel setup process started for GRI VC**

Gandhigram Rural Institute (GRI) – Deemed to be University. Gandhigram is controlled by the Ministry of Human Resource Development (MHRD) Government of India and fully funded through UGC, New Delhi. The present Vice- Chancellor Dr S.Natarajan is completing his tenure on 22nd May 2019. In this connection, MHRD, Government of India has initiated the process of forming a Search cum Selection committee for the selection of new Vice-Chancellor. After the constitution of committee, formal selection process will be announced by the committee.

**Press Release: Dr O.Muthiah, PRO, GRI**

Director - CC
to upload in university website
V. P. [signature]
31.1.19